# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure ) Crl.Misc.39

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | **II ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THANJAVUR** |
| Case No. | : | **SC 114/2021** |
| Name of Deponent | : | **PW 1 வெண்ணிலா** |
| Father's Name /Husband Name | : | கோவிந்தராஜ் |
| Village | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | **40** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 01.11.2022**

**அரசு தரப்பில் முதல் விசாரணை** : -

நான் பள்ளியக்ரகாரம் காந்திநகரில் குடியிருக்கிறேன். நான் கூலிவேலை பார்க்கிறேன். எனக்கு குணசீலன், ஜெயசீலன், மோனிசா ஆகிய பிள்ளைகள் உள்ளனர். ஆஜர் எதிரிகளைத் தெரியும். 17.05.2020 ம் தேதி காந்திநகரில் உள்ள மகா காளி கோயிலில் இளையராஜா, என் பையன் குணசீலன், எதிரி மணிகண்டன், எதிரி கார்த்தி ஆகியோர் உட்கார்ந்திருக்கும்போது ஏதோ சண்டை என்று சொல்லி என் மகன் வீட்டிற்கு ஓடி வந்தான். அப்போது இரவு 8.00 மணி இருக்கும். என் மகன் என்னிடம் பிரண்டுகளுக்குள் சண்டை என்று சொன்னான். நான் பிரண்டுகளுக்குள்தானே சண்டை காலையில் பேசிக்கொள்ளலாம் வீட்டிற்குள்ளேயே இரு என்று சொன்னேன். ஒரு வாரம் கழித்து பகல் 2.30 மணியளவில் என் மகன் வேலைக்கு சென்றிருந்தபோது ஆஜர் எதிரிகள் மூன்று பேரும் என் வீட்டிற்கு வந்து உன் மகன் எங்கே உன் மகனையாவது உன் மருமகனையாவது காலிசெய்துவிடுவோம் என்று சொன்னார்கள் அவ்வாறு சொன்ன தேதி மே மாதம் 28 ம் தேதி. என் மருமகன் பெயர் புகழேந்தி. என் மகனிடம் உம் அம்மாவையும் பாப்பாவையும் -மிரட்டிகொண்டிருக்கிறார்கள் என்று யாரோ தகவல் சொன்னதால் என் மகன் என் வீட்டின் அருகே குறுக்கே உள்ள பாதையில் வந்துகொண்டிருந்தான். என் மகன் வருவதற்குள்ளாக எதிரிகள் என் வீட்டிற்குள்

நுழைந்து fan, Tv, Cellphone மற்ற வீட்டிற்குள்ள சாமான்களை உடைத்துவிட்டார்கள். என் மகன் வந்ததும் என் மகனை எதிரிகள் இழுத்துக்கொண்டு சந்திற்குள் போய்விட்டார்கள். நானும், என் மகளும், என் தம்பி மகளும் பையனை விடுங்கடா என்று சொல்லிக்கொண்டு போனோம். அப்போது என் மகனை கார்த்திகையில் இருந்த கடப்பாறையால் என் மகனின் மண்டையில் அடித்தார். பாத்ரூம் அருகே இருந்த கம்பியை எடுத்து மணிகண்டன் என் மகனின் மண்டையில் அடித்தான். என் மகன் கீழே விழுந்துவிட்டான். எதிரிகள் மூன்றுபேரும் மாறிமாறி என் மகனை அடித்தார்கள். எதிரிகள் கையில் கடப்பாறை, கத்தி, அரிவாள், கம்பி ஆகியவற்றை வைத்து மாறிமாறி அடித்தார்கள். சாட்சி சொல்லிவிட்டு வீட்டில் இருப்பதற்கு கூட பயமாக இருக்கிறது. நாங்கள் என் மகனை விடுங்கடா விடுங்கடா என்று சொல்லும்போது எங்களை நோக்கியும் கையில் இருந்த கத்தி கடப்பாறையுடன் எதிரிகள் ஓங்கி கொண்டு வந்தார்கள். எங்கள் வீட்டிற்கு அருகே கருவைக்காடு மற்றும் வயல்காடு இருக்கிறது எதிரிகள் அந்த பக்கம் ஓடிவிட்டார்கள். அதன்பிறகு நாங்கள் நடுக்காவேரி  காவல் நிலையத்திற்கு போன் செய்து சொன்னோம். காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். புகாரில் நான் கையெழுத்து போட்டேன். புகாரில் இருப்பது என் கையொப்பம்தான். புகார் **அசாஆ 1**. என்னால் ஆயுதங்களை அடையாளம் காட்ட முடியும். என்னிடம் காட்டப்படும் கடப்பாறை மற்றும் கம்பிதான் சம்பவத்தில் எதிரிகள் பயன்படுத்தியவை. கடப்பாறை **அசாபொ1.** கம்பி **அசாபொ2.** என்னிடம் காட்டடப்படும் அரிவாள் இல்லை என சாட்சி சொல்லிவிட்டு அரிவாளை அவர் அருகில் கொண்டு காட்டியதும் அந்த அரிவாள் தான் என்றும் கைப்பிடியை பார்த்து அடையாளம் சொல்வதாகவும் சொல்கிறார். அரிவாள் **அசாபொ3**. நீதிமன்றத்தில் காட்டப்படும் டிவி எங்களுடையதுதான். அது **அசாபொ4**.  போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்வதற்கு மனு தாக்கல் செய்ததின்பேரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என்  முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/-) A. மலர்விழி,
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure ) Crl.Misc.39

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | **II ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THANJAVUR** |
| Case No. | : | **SC 114/2021** |
| Name of Deponent | : | **PW 2 மோனிஷா** |
| Father's Name /Husband Name | : | |
| Village | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | **25** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 01.11.2022**

**அரசு தரப்பில் முதல் விசாரணை** : -

நான் தற்போது பழைய மாரியம்மன் கோவில்தெருவில் சாலக்காரத்தெருவில் குடியிருக்கிறேன். நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் வீட்டில்தான் உள்ளேன். அசா1 என் தாயார். என்னுடன் உடன் பிறந்தவர்கள் குணசீலன், ஜெயசீலன் ஆவார்கள். ஆஜர் எதிரிகளைத் தெரியும். 17.05.2020 இரவு 8.00 மணி காந்திநகர் பள்ளியக்ரகாரத்தில் உள்ள காளியம்மன் கோயிலில் என் அண்ணன், பாலா, இளையராஜா, மணிகண்டன், கார்த்தி ஆகியோர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். பேச்சுவாக்கில் சண்டை வந்துவிட்டது. உடனே எனது அம்மா, என் அம்மாச்சி, என் அப்பா கோவிந்தன் ஆகியோர் போய் விலக்கி விட்டார்கள். அதன்பிறகு என் அண்ணன் குணசீலனை என் அம்மா அழைத்து வந்துவிட்டார். அதன்பிறகு ஒரு வாரம் கழித்து ஆஜர் எதிரிகள் எங்கள் தெருவில் உள்ள வீட்டிற்கு வந்து மிரட்டிவிட்டு சென்றார்கள். அப்போது என் அம்மாவிடம் ஆஜர் எதிரி கார்த்தி உன் மகன் என்னை அடித்தான்ல.. அவன சாகடிக்காமல் விடமாட்டேன் அவன் சாவு என் கையில்தான் என்று கூறினார். அதற்கு என் அம்மா விளையாட்டிற்கு தானே சண்டை போட்டீர்கள் ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டார். 28.05.2020 ம் தேதி மதியம் 2.30 மணிக்கு கார்த்தி, மணிகண்டன், கார்த்தியின் மச்சான் ஆகியோர் மூவரும் எங்கள் வீட்டு வாசலுக்கு வந்தார்கள். நானும் எனது அத்தை பொண்ணு பாத்திமாவும், என் அம்மாவும் பேசிக்கொண்டிருந்தோம். ஆஜர்

எதிரிகள் உன் அண்ணன் குணசீலன் எங்கே என்று என்னிடமும், என் அம்மாவிடமும் கேட்டார்கள். எங்கள் வீட்டில் ராஜு என்ற பையனை வளர்த்துகொண்டுவந்தோம். அவனை அடித்து குணசீலனை அழைத்துவாடா என்று எதிரிகள் கூறினார்கள். அதற்கு நானும் என் அம்மாவும் ராஜுவை நீ எங்கேயாவது போய் விடுடா என்று சொன்னோம். ஆஜர் எதிரிகள் வீட்டிற்குள் புகுந்து டிவி, முகம் பார்க்கும் கண்ணாடி ஆகியவற்றை உடைத்துவிட்டு வெளியே வரும்போது குணசீலன் வந்துவிட்டார். குணசீலன் வந்த உடன் அவரை எங்கள் வீட்டிற்கும், பக்கத்து வீட்டு வின்சென்ட் வீட்டிற்கும் இடையில் உள்ள சந்தில் அடித்து இழுத்து சென்றார்கள். நானும், என் அம்மாவும், பாத்திமாவும் அடிக்காதீங்கடா என்று கூறிக்கொண்டு பின்னே சென்றோம். எனது அண்ணன் குணசீலனை கடப்பாறை, அரிவாள், கட்டில்கால்இரும்புகம்பியால் அடித்தார்கள். என்னையும் தாக்க வந்தார்கள். என் அம்மா நீ மாசமாக இருக்கிறாய் நீ போய் விடு என்று கூறினார்கள். எனது அண்ணன் குணசீலனை ஆஜர் எதிரிகள் தலையிலும், நெற்றி பொட்டிலும் அரிவாள், கடப்பாறை, இரும்பு கம்பியால் அடித்து எனது அண்ணன் இறந்துவிட்டார். எனது அண்ணன் குணசீலனைவின்சென்ட் வீட்டிற்கு பின்னால் இருக்கும் லெட்டினில் வைத்து அடிக்கும்போது அப்போது மழை பெய்து கொண்டிருந்ததால் வழுக்கி கீழே விழுந்து கிடந்தார். என் அண்ணன் ஜெயசீலன் வந்ததும் என் அம்மாவும், அவரும் குணசீலனை லெட்டினுக்கு அருகில் உள்ள விறகு போட்டிருக்கும் கூரைஇடத்தில் கொண்டு வந்து வைத்தார்கள். அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் என் அம்மா கத்தியதை பார்த்து வந்துவிட்டார்கள். எதிரிகள் என் வீட்டிற்கு பின்புறமாக உள்ள வயல்காட்டு பக்கம் ஓடிவிட்டார்கள். என் அம்மா புகார் கொடுத்தார். போலிசார் என்னை இவ்வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் இரும்புகம்பிதான் கட்டில்கால். கடப்பாறை, கட்டில்கால், அரிவாள் ஆகியவைதான் எதிரிகள் கையில் வைத்திருந்தது.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்வதற்கு மனு தாக்கல் செய்ததின்பேரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/-) A. மலர்விழி,

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.